# தொகுத்தறி மதிப்பீடு 2024 – 25
# தமிழ் – பருவம் III
## வகுப்பு – 5

பெயர் : ______________________ மதிப்பெண் : 60

பிரிவு : ______________________ நேரம் : 2 மணி

**1. ஒரு பொருள் பன்மொழியைப் பொருத்துக.** 5 x 1 = 5

அ) உள்ளம் – செய்யுள், பாட்டு

ஆ) அரசன் – கடல், சமுத்திரம்

இ) வெகுமதி – வேந்தன், கோ

ஈ) கவிதை – சன்மானம், பரிசு

உ) ஆழி – மனம், நெஞ்சம்

**2. பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.** 5 x 1 = 5

அ) தோப்பில் ______________ (தென்னை / தெண்ணை) மரங்கள் உள்ளன.

ஆ) தவளை ______________ (மலையில்/மழையில்) நனைந்தது.

இ) படைவீரர் கையில் கூர்மையான ______________ (வால்/வாள்) இருந்தது.

ஈ) நெற்பயிர்களுக்கு இடையே ______________ (கலைகள்/களைகள்) முளைத்திருந்தன.

உ) வாணி, துரித உணவைச் சாப்பிட்டதால் வயிற்றில் ______________ (வளி/வலி) ஏற்பட்டது.

**3. தொடர்களைப் படித்து வரிசைப்படுத்தி எண் இடுக.** 5 x 1 = 5

அ) பாலன் அவசர வேலை இருக்கிறது எனக்கூறிச் சென்றுவிட்டார்.

ஆ) மூதாட்டி ஒருவர் உடல்நலமின்றி மரத்தடியில் படுத்திருந்தார்.

இ) பூவண்ணன் மூதாட்டியைத் தூக்கிவிட்டார்.

ஈ) மூதாட்டி உதவி செய்யுமாறு பாலனை அழைத்தார்.

உ) பூவண்ணன் உணவு வாங்கிக் கொடுத்தார்.

அ) ________ ஆ) ________ இ) ________ ஈ) ________ உ) ________

**4. தொடருக்கு ஏற்ற பொருளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5 x 1 = 5

(பொய் அழுகை, வேலை போய்விட்டது, மறைந்து போதல், அலைந்து திரிதல், இல்லாத ஒன்று)

அ) பஞ்சாகப் பறத்தல் – ______________________

ஆ) ஆகாயத்தாமரை – ______________________

இ) ஓலை கிழிந்தது – ______________________

ஈ) முதலைக் கண்ணீர் – ______________________

உ) நீர் மேல் எழுத்து – ______________________

www.Padasalai.Net

5. பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக. 5 x 1 = 5

பெண்ணே ___ நீ சொல்வது உண்மைதானா ___ உண்மையாயின் அரசிக்குரிய சிலம்பின் பரல் முத்துகளால் ஆனது ஆன்றோர் நிறைந்த இந்த அவைதனிலே அனைவருக்கும் உண்மையை உணர்த்துகிறேன். யாரங்கே ___ கோவலனிடமிருந்து பெற்ற அச்சிலம்பை இங்குக் கொண்டு வா ___

6. தொடர் அமைத்து எழுதுக. 5 x 1 = 5

அ) ஒலிபெருக்கி ______

ஆ) ஓணான் ______

இ) திருவிழா ______

ஈ) வள்ளல் ______

உ) விருந்து ______

7. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. 1 x 5 = 5

கண்வனப்புக் கண்ணோட்டம் கால்வனப்புச் செல்லாமை
எண்வனப்பு இத்துணையாம் என்றுரைத்தல் - பண்வனப்புக்
கேட்டார்நன் றென்றல் கிளர்வேந்தன் தன்னாடு
வாட்டான்நன் றென்றல் வனப்பு.

அ) இரண்டு உடல் உறுப்புகளின் பெயர்கள் ______, ______ (2)

ஆ) இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் சொற்கள் ______, ______ (2)

இ) இசை எனப் பொருள் தரும் சொல் ______ (1)

8. படிவத்தை நிரப்புக. 5 x 1 = 5

**சேர்க்கை விண்ணப்பப் படிவம்**

| | |
|---|---|
| 1. மாணவர் பெயர் | - |
| 2. பிறந்த நாள் | - |
| 3. பெற்றோர் பெயர் & வீட்டு முகவரி | - |
| 4. இறுதியாகப் படித்த வகுப்பு, பள்ளி | - |
| 5. மாணவர் கையொப்பம் | - |

www.Padasalai.Net

9. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. 1 x 5 = 5

இந்திரா காந்தி வனவிலங்கு சரணாலயம் கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகில் அமைந்துள்ளது. இதன் வரலாறு மிகவும் தொன்மையானது. இங்கு அமைந்துள்ள 'கரிசன் சோழா' என்ற பகுதியை 'மூலிகை மருத்துவமனை' என்று அழைக்கின்றனர். பலவிதமான விலங்குகள், பறவைகள், மூலிகைகள் இங்கு உள்ளன. சிறுவாணி ஆறு, ஆழியாறு போன்ற ஆறுகள் இப்பகுதியை வளப்படுத்துகின்றன. தமிழ்நாட்டில் உள்ள ஐந்து புலிகள் காப்பகங்களில் இச்சரணாலயம் அதிக பரப்பளவைக் கொண்டுள்ளது.

அ) 'கரிசன் சோழா' பகுதியை எவ்வாறு அழைப்பர்? ______________________ (1)

ஆ) பழைமை, காட்டுவிலங்கு – இச்சொற்களுக்கு இணையான சொற்கள் எவை? (2)

______________________, ______________________

இ) வனவிலங்கு சரணாலயம் அமைந்துள்ள பகுதியை வளப்படுத்தும் ஆறுகள் யாவை? (2)

______________________, ______________________

10. அறிவிப்பைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக. 1 x 5 = 5

அனைவரும் வருக! அறிவு வளம் பெறுக!

**அண்ணா நூற்றாண்டு நூலகம், சென்னை**

| | | |
|---|---|---|
| முதல் தளம் | – | குழந்தைகள் பிரிவு, பருவ இதழ்கள் |
| இரண்டாம் தளம் | – | தமிழ் நூல்கள் |
| மூன்றாம் தளம் | – | கணினி அறிவியல், தத்துவம், அரசியல் நூல்கள் |
| நான்காம் தளம் | – | பொருளியல், சட்டம், வணிகவியல், கல்வி |
| ஐந்தாம் தளம் | – | கணிதம், அறிவியல், மருத்துவம் |



உங்கள் விடுமுறை நாளைப் பயனுள்ளதாக்க
அண்ணா நூற்றாண்டு நூலகம் வருக!



1. நீங்கள் அண்ணா நூற்றாண்டு நூலகம் சென்றால் எந்தத் தளத்திற்குச் செல்ல விரும்புவீர்கள்? ஏன்? (2)

______________________

2. மருத்துவ நூல்களைப் படிக்க நீங்கள் செல்ல வேண்டிய தளம் எது? (1)

______________________

3. உங்கள் வீட்டில் நூலகம் அமைக்க விரும்பினால் எந்த வகையான நூல்களைத் தேர்ந்தெடுப்பீர்கள்? ஏன்? (2)

______________________

www.Padasalai.Net

11. சொற்களைப் பயன்படுத்திக் கதை உருவாக்கி எழுதுக.
(குறைந்தது ஐந்து சொற்கள்) 1 x 5 = 5

(குளம் – தவளை – ஆமை – பூங்குன்றன் – கடற்கரை – அலைபேசி – பட்டம் – தேனீ – மீன்கள் – அகிலன் – பேருந்து)

12. உங்கள் பள்ளியில் நடைபெற்ற குடியரசுதின விழா குறித்து நண்பனுக்குக் கடிதம் எழுதுக. 1 x 5 = 5

8, மேல வீதி,

திருவாரூர்.

அன்பு நண்பா, (3)

(1)

உறைமேல் முகவரி (1)

www.Padasalai.Net